# சங்கத் தமிழ் அனைத்தும் தா

கல்வெட்டுக்கள், செப்பேடுகள்
ஓலைச் சுவடிகள் என அன்று;
காகிதக் கட்டுக்கள், ஒலி ஒளி நாடாக்கள்
குறுந்தகடுகள் என இன்று;
இன்னும் கணனி, இணையதளம் என்று
தொல்காப்பியமும், திருக்குறளும்
ஔவையின் ஆத்திசூடியும்
அனைத்துச் சங்க இலக்கியங்களும்
இம்மண்ணில் தவழ்ந்திட, தழைத்திட
தளமாய் அமைந்தது - கல்லிலிருந்து
கணனி வரை தொழில் நுட்பம் பல;

இளைய தலைமுறையே, நீ
இனி வரும் நாளுக்காய்
என்றும் காலத்தை வென்று நிற்கும்
புது இலக்கியம் தா;
உள்ளங்கவர் காவியம் தா;
மனதை வருடும் கவிதைகள் தா;
சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் தா;
சமுதாயச் சீர் செய்யும் படைப்புகள் தா;

சங்கத் தமிழ் அனைத்தும் - உடன்
நீ படைக்கும் தங்கத் தமிழ் அனைத்தும்
காலத்தாலும் அழிக்க முடியாதவாறு பதிவு செய்ய
புதுத் தொழில் நுட்பம் தா - நுட்பம் செய்ய
ஆழ்ந்த அடிப்படை அறிவியல் தா...

(உலகத் தமிழ் செம்மொழி மாநாடு
கவிதைப் போட்டிக்கு)

அ. சொக்கலிங்கம்
பெங்களூர்
17 மே 2010.